3

# தேவனுடைய குமாரன் மூலமாக இரட்சிப்பு

*இயேசு கிறிஸ்து வேதாகம வரலாற்றின் மையமாக இருக்கிறார். பழைய ஏற்பாடு அவருடைய வருகையை ஆயத்தப்படுத்துகிறது. சுவிசேஷ புத்தகங்கள் அவர் வந்து விட்டதை அறிவிக்கின்றன. புதிய ஏற்பாட்டின் எஞ்சிய நிருபங்கள் அவருடைய வருகையின் முக்கியத்துவத்தை விளக்குகின்றன மற்றும் அவர் மீண்டும் வருகிறார் என்பதை முன் அறிவிக்கின்றன.*

*ஆகவே, யோவான் தன் முதல் நிருபத்தில், தன் வாசகர்களின் விசுவாச நிச்சயத்தை மறு உறுதிப்படுத்த விரும்பியது நமக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணுவதில்லை. அவர்கள் "தேவகுமாரன் மூலம் இரட்சிப்பை" பெற்றிருந்தார்கள் என்பதை அவர் வலியுறுத்தி கூறினார். அவர் தனது நிருபத்தின் 2ஆம் அதிகாரத்தை இந்த வசனங்களோடு துவங்குகிறார்:*

> *என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களைமாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.*

*''நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து'' நமது இரட்சிப்பின் நம்பிக்கையாயிருக்கிறார்!*

*இந்த பாடத்தில் நாம் யோவான் இயேசு யார் என்பது தொடர்பாக என்ன சொன்னார் என்பதை ஆராய்வோம், பிறகு அவர் என்ன செய்தார் என்பதை கேட்போம். இறுதியாக, அவர் நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை குறித்து பரிசீலிப்போம்.*

## இந்த இயேசு யார்?

### *இயேசுவைக் குறித்த சத்தியம்:*
### *1 யோவானில் இயேசுவை குறித்த விவரிப்புகள்*

யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டபடி, இயேசு ...

1. *"ஆதிமுதல் இருந்தவர்" (1 யோவான் 1:1-3).*[1]
2. *"ஜீவவார்த்தை" (1 யோவான் 1:1; காண்க யோவான் 1:1, 14).*
3. *"நித்திய ஜீவன்" (1 யோவான் 1:2; காண்க யோவான் 1:4; 14:6).*

4. *"இயேசு" - என்றால் "இரட்சிப்பு"* (1 யோவான் 1:3, 7; காண்க மத்தேயு 1:21, 25).
5. *"கிறிஸ்து" - என்றால் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்"* (1 யோவான் 1:3; 2:22; 5:1). 1 யோவானில் "கிறிஸ்து" என்பது இயேசு தெய்வீகமானவர் என்பதையும் உள்ளடக்குகிறது.
6. *தேவனுடைய குமாரன், பிதாவின் குமாரன்* (1 யோவான் 1:3, 7; 2:22, 23; 4:9, 14, 15; 5:9). தேவனுடைய குமாரனாயிருத்தல் என்பது தேவனுடைய தன்மையை பெற்றிருப்பதாகும் (காண்க யோவான் 10:32-38 மற்றும் 2 யோவான் 3, 4, 9).
7. *"நீதிபரர்"* (1 யோவான் 2:1; 3:7; ஒப்பிடுக எபிரேயர் 4:15).
8. *பரிந்து பேசுகிறவர்* (1 யோவான் 2:1).
9. *நம்முடைய பாவங்களுக்கான கிருபாதார பலி* (1 யோவான் 2:2; 4:10).[2]
10. *இரட்சகர்* (1 யோவான் 4:14).[3]

### இயேசுவைக் குறித்த தவறான போதனைகள்

இந்த எல்லா விதங்களிலும் இயேசுவைக் குறித்து விவரித்தாலும், யோவான் தனது வாசகர்களை இயேசுவின் தன்மை தொடர்பான கள்ளப் போதனைகளுக்கு எதிராக பாதுகாத்தார். கள்ளப்போதகர்கள் பற்றிய அவருடைய எச்சரிப்புகள் இனிய கீதங்களில் ஒன்றை - நிருபம் முழுவதும் காணப்படும் மையக் கருத்துக்களை உண்டாக்குகிறது.

யோவான் அதே கள்ளப் போதகர்களை குறித்து 1 யோவான் 4:1-3இல் பேசியுள்ளார்:

> பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். தேவ ஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்; மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது.

இந்த கள்ளப் போதகர்கள் யார் மற்றும் அவர்கள் என்ன போதித்தார்கள்? யோவான் கிறிஸ்துவுக்கு எதிராக இருந்த அவர்களை "வஞ்சகர்கள்" மற்றும் "அந்திக் கிறிஸ்துகள்" என அழைத்தார். அவர், அவர்களை நம்மை விட்டு "பிரிந்து போனவர்கள்" - வேறு வார்த்தையில், அவர்களை வழிவிலகிப் போன கிறிஸ்தவர்கள்[4] என குறிப்பிட்டார் (1 யோவான் 2:18, 19; 2 யோவான் 1:7). மேலும் அவர்கள் போதித்தவைகளிலிருந்து அவர்கள் இரண்டாம் நூற்றாண்டின் ஞானதர்க்கவாத கொள்கையாகிய ஒரு ஆரம்பகால வடிவை பெற்றிருந்தார்கள் என நாம் யூகிக்கிறோம்.

"கினாஷ்டிசிசம்" என்ற வார்த்தையானது "அறிவு" என பொருள்படும் "*gnosis* கினாசிஷ்" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்துள்ளது. இந்த

கொள்கையாளர்கள் மற்றவர்கள் பெற்றிராத ஒரு சிறப்பான அறிவு தங்களுக்கு இருப்பதாக கூறிவந்தார்கள். இந்த கொள்கை பல வடிவங்களில் இருந்த போதிலும், அவர்கள் எல்லாருக்கும் ஒரு பொதுவான நம்பிக்கை இருந்தது: அவர்கள் ஆவி நன்மையானதென்றும், பொருள் மற்றும் உடல் தன்னில் தானே தீமையானதென்றும் நம்பினார்கள். இதன் விளைவாக, ஆவியாயிருக்கிற தேவன் முற்றிலும் நல்லவரென்று நம்பினார்கள், அப்படிப்பட்டவர் ஒரு உடலுடன் வந்து மனித உடலில் வாசம் செய்வது சாத்தியமல்லவென்றும் நம்பினார்கள். அவர்களை பொருத்தவரை, தேவன் மாம்சத்திலிருந்தார் என்பது சாத்தியமான ஒன்றாக இருக்கவில்லை!

அப்படியானால் இயேசு யாராக இருந்தார்? இந்த கொள்கையாளர்களுக்கு இரண்டு சாத்தியக் கூறுகள் மட்டுமே இருந்தன. (1) இயேசு உண்மையில் மாம்சமாக இருக்கவில்லை; அவர் அவ்விதம் காட்சியளித்தார் அல்லது மாம்சத்தை உடையவராக காணப்பட்டார். இந்த கருத்தை கொண்டிருந்த ஒருவர் இயேசு பூமியிலிருந்தபோது ஒரு முப்பரிமாண காட்சியுடையவராக இருந்தார் என்று நம்பலாம். அவர் தன் கையை நீட்டி இயேசுவை தொடக்கூடுமானால், அவருடைய கை அவர் வழியாக கடந்து போய்விடும் என எதிர்பார்க்கிறவராக இருந்தார். (2) இன்னொரு சாத்தியக்கூறு என்னவென்றால் இயேசு ஒரு சாதாரண மனிதராக இருந்தார் ஆனால் சில கட்டங்களில்- அநேகமாக அவர் ஞானஸ்நானம் பெற்ற போது - கிறிஸ்து அவரில் வாசம் செய்யும்படி வந்தார். ஆகவே அவருடைய ஊழிய காலத்தில், இயேசு, கிறிஸ்துவை தனக்குள் வாழும்படி பெற்றிருந்த ஒரு மனிதராயிருந்தார்.[5] இருப்பினும், அவர் மரிப்பதற்கு முன்பு கிறிஸ்து அவரை விட்டு விலகி போய்விட்டார், ஆகவே மரித்த இயேசு ஒரு முழுமனிதராகவே இருந்தார். இந்த சிந்தையின்படி, இயேசு மற்றும் கிறிஸ்து ஆகியோருக்கிடையில் ஒரு தெளிவான வித்தியாசம் ஏற்படுத்த வேண்டியதாயிருந்தது, இயேசு ஒரு சாதாரண மனிதராயிருந்தார் மற்றும் கிறிஸ்து தெய்வீகமானவராக இருந்தார், ஆனால் அவர் ஒரு உண்மையான மனிதராக இருக்கவில்லை.

இந்த இரண்டு கருத்துக்களுமே தவறானவைகள் என யோவான் வாதிட்டார். யோவான், இயேசுகிறிஸ்து உலகத்தில் இருந்த போது ஒரே நபராக இருந்தார். மற்றும் அவர் தேவனுடைய குமாரனாக இருந்தார் என வலியுறுத்தி சொன்னார். மேலும், அவர் இயேசுவே கிறிஸ்து எனவும், அவர் தெய்வீகமானவராக இருந்தார் எனவும், அவர் மாம்சத்தில் வந்திருந்தார் எனவும் விசுவாசிக்காவிட்டால் நாம் இரட்சிக்கப்பட முடியாது என்பதையும் வலியுறுத்தி சொன்னார்!

### இயேசுவின் உண்மையான தன்மைக்கான சாட்சிகள்

நாம் ஏன் இயேசுவை விசுவாசிக்க வேண்டும்? இயேசு தம்மை யார் என்று அறிவித்தாரே, அவர் அவராகவே இருந்தார் என்பதைஅவருடைய தெய்வீக தன்மைக்கான சாட்சிகள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம் என 1 யோவான் நிருபத்தில் நாம் அறிகிறோம்.[6] அந்த சாட்சிகள் யாராக இருந்தார்கள்?

(1) *அப்போஸ்தலர்கள்.* யோவான் அப்போஸ்தலர்கள் கேட்டிருந்த, கண்டிருந்த மற்றும் தொட்டு உணர்ந்திருந்ததைப் பற்றி பேசினார். அவர்கள் இயேசு உண்மையிலேயே தேவனாகவும் மற்றும் உண்மையிலேயே மனிதராகவும் இருந்தார் என்பதை அறிந்திருந்தார்கள். யோவான், “அந்த ஜீவன்

வெளிப்பட்டது; பிதாவிடத்திலிருந்ததும்; எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதை குறித்துச் சாட்சி கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்'' என கூறினார் (1 யோவான் 1:2).

*(2) ஆவி, ஜலம் மற்றும் இரத்தம்.* 1 யோவான் 5:6-8இல், இவ்வாறு நாம் வாசிக்கிறோம்,[7]

> இயேசு கிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்; ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சி கொடுக்கிறவர். பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்; பூலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது.

இந்த மூன்று சாட்சிகளும் ஒத்துப்போகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதில் ''ஜலம்'' என்பது அநேகமாக இயேசுவின் ஞானஸ்நானத்தை குறிக்கிறது. "இரத்தம்" என்பது இயேசுவின் மரணத்தை குறிக்கிறது மற்றும் அவருடைய உயிர்த்தெழுதலையும் குறிக்கலாம். ''ஆவி'' என்பது பரிசுத்த ஆவியாயிருக்கிறது மற்றும் அவர் "சத்தியம்'' என்று விவரிக்கப்படுகிறார். அவர் பொய்சொல்ல முடியாது. இயேசுவின் ஞானஸ்நானத்தில், இயேசு தம்முடைய குமாரராக இருந்தார் என்று தேவனானவர் சாட்சி கொடுத்தார்.[8] இயேசுவின் மரணத்தின் போது, ஒரு இருளடைந்த சூரியன், ஒரு நில அதிர்வு மற்றும் தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்தது போன்ற அற்புத சம்பவங்கள் நிகழ்ந்தன. பின்னர், உயிர்த்தெழுதல் நிகழ்ந்தது. பின்னர், பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி அப்போஸ்தலர்களை ஏவினார், மற்றும் அவர்கள் இயேசுவே கிறிஸ்துவாக இருந்தார் என அறிவித்தார்கள். மேலும், ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியானவரின் வரம் கொடுக்கப்பட்டது (நடபடிகள் 2:38; 5:32). புதிய கிறிஸ்தவரிலிருந்த அவருடைய பிரசன்னம் அவர் இரட்சிக்கப்பட்டார் என்பதற்கும் மற்றும் இயேசு தம்மை யார் என்று அறிவித்தாரோ அவராகவே இருந்தார் என்பதற்கும் சான்றாக இருந்தது. இவ்விதமாக, இந்த மூன்று சாட்சிகளும் இயேசு தெய்வீகமான தேவனுடைய குமாரராக இருந்தார் என்பதை ஒத்துக்கொண்டார்கள்.

*(3) தேவன்.* தேவனானவர் தாமே இயேசுவின் தெய்வீக தன்மைக்கு சாட்சியாயிருக்கிறார். இதை குறித்து யோவான், இவ்வாறு சொன்னார்,

> நாம் மனுஷருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால், அதைப் பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது; தேவன் தமது குமாரனைக் குறித்து கொடுத்த சாட்சி இதுவே. தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்; தேவனை விசுவாசியாதவனோ, தேவன் தம்முடைய குமாரனைக் குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசியாததினால், அவரைப் பொய்யராக்குகிறான், தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார்,

அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன், ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன் (1 யோவான் 5:9-12).

தேவனானவர், இயேசு தம்முடைய குமாரராக இருந்தார் என்பதை பல வழிகளில் நிரூபித்தார். குறைந்தபட்சம் அவர் பரலோகத்திலிருந்து இரண்டு சந்தர்ப்பங்களில் பேசினார் (மத்தேயு 3:17; 17:5) மற்றும் அவர் தம்முடைய குமாரன் என பிரகடனம் செய்தார். தேவனானவர் இயேசுவை அடையாள அற்புதங்கள் செய்யும்படி பலப்படுத்தினார், அந்த அடையாள அற்புதங்கள் அவரை தேவனுடைய குமாரன் என நிரூபித்தன (எபிரெயர் 2:4; யோவான் 20:30, 31). நித்திய ஜீவனை நாம் பெறுவதற்கு இயேசு ஒருவரே வழியாக இருக்கிறார் என்பதை கிறிஸ்து மூலமும் அப்போஸ்தலர்கள் மூலமும் வெளிப்படுத்தினார்.ஒரு விசுவாசி தேவனுடைய சாட்சியை "தமக்குள் உடையவராக" இருக்கிறார், அதாவது தேவனுடைய குமாரனாகிய இயேசுவுக்குள் இரட்சிப்பை பெற்றிருக்கிறார், இது இயேசுவின் தெய்வீக தன்மைக்கு சான்றாக இருக்கிறது என்று யோவான் மேலுள்ள வசனப்பகுதியில் வலியுறுத்தினார்.

**இயேசு தெய்வீகமானவராக இருந்தார் என்பதின் விளைவுகள்**

இயேசு கிறிஸ்து தெய்வீகமானவர் - ஆனால் அது நமக்கு என்ன அர்த்தத்தை கொடுக்கிறது? அது முதல் நூற்றாண்டில் இருந்தவர்களுக்கு என்ன அர்த்தத்தை கொடுத்ததோ, அதே அர்த்தத்தை நமக்கும் கொடுக்கிறது - அதாவது நாம் இரட்சிக்கப்படும்படி இயேசுவை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று ஏற்றுக் கொள்ளவேண்டும்!

பழக்கத்தின் அடிப்படையில் சபைக்கு செல்கிறவர்களுக்கு இந்த சத்தியம் புரட்சிகரமானதாக இருக்காது. இருந்த போதிலும், இது முதல் நூற்றாண்டில் புரட்சிகரமானதாக இருந்தது. இயேசு கிறிஸ்துவானவரைப் போல தமது தெய்வீக தன்மையை குறித்து எவரும் உரிமை கோரியதில்லை. இயேசுவின் சீஷர்களைப் போல உரிமைகோரிய சீஷர்களை வேறு எவரும் பெற்றிருந்ததில்லை. அவர்கள் உலகத்தில் இருக்கிற ஒவ்வொருவரும் இயேசுவை விசுவாசித்து, சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவரையில் ஆத்துமா இழந்து போனவர்களாக இருக்கிறார்கள் என்பதை அறிவித்தார்கள்!

இந்த காட்சிகள் துல்லியமானதாக இருந்திருக்குமானால், மற்றும் இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்திருந்தாரானால், அந்த காரியம் இன்றும் உண்மையாயிருக்கிறது! அநேகமாக உலகத்தின் மக்கள் தொகையில் 70% மக்கள் உலகத்தின் எந்த அர்த்தத்திலும் இன்று கிறிஸ்தவர்களாக இருப்பதில்லை. இன்று உலகில் 600 கோடி மக்கள் வாழ்வார்களானால், மற்றும் அவர்களில் 500 கோடி மக்கள் கணக்கு ஒப்புவிக்கும் வயதை அடைந்த பெரியவர்களாக இருப்பார்களானால், 350 கோடி மக்கள் இயேசுவை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசியாமலும் மற்றும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாமலுமிருக்கிறபடியால், அவர்கள் இழந்து போனவர்களாக இருக்கிறார்கள்!

நாம் ஏதாவது ஒரு விதத்தில்/அர்த்தத்தில் தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறி

கொள்ளும் மக்களை குறித்தும் சிந்திக்க வேண்டும். அவர்களில் அநேகர் இயேசு ஒரு பெரிய மனிதராக, ஒரு "நல்ல" மனிதராக அல்லது ஒரு சிறந்த போதகராக இருந்தார் என்று சிந்திக்கிறார்கள். மற்றவர்களை பின்பற்றுவதை விட அவரைப் பின்பற்றுவதை அவர்கள் விரும்புகிறார்கள் ஆனால் இயேசுவை விசுவாசியாத மற்றவர்கள் நித்தியத்திற்கும் இழந்து போனவர்களாக இருப்பார்கள் என்ற கருத்தை அவர்கள் நிராகரிக்கிறார்கள். கிறிஸ்தவ நாடுகளிலுள்ள சபை பிரிவுகளில் அவைகளின் விசாலமான சிந்தையில் பலர், ஒருவர் கிறிஸ்தவராக இருப்பது நல்லது தான், ஆனால் அவர் ஏதாவது ஒரு சபை பிரிவில் இருப்பது தவறல்ல, அவர் ஒரு நல்ல மனிதராக, தனக்கிருக்கிற நம்பிக்கைகளின்படி வாழ்கிற வரை அவர் ஒரு நாஸ்திகராக இருந்தாலும் கூட அது தவறு இல்லை என்ற ஒரு போதனையை போதிக்கிறார்கள்!

கிறிஸ்துவை விசுவாசிப்பது என்பது நமக்கு இருக்கும் பல தெரிவுகளில் ஒன்று அல்ல. ஒரு மனிதன் இரட்சிக்கப்பட வேண்டுமானால், இயேசு கிறிஸ்து ஒருவரே தேவனிடத்திலிருந்து வந்த தெரிவாக இருக்கிறார். இந்த பூமியில் சூரியன் இன்றி வாழ்வது இயலாததாக இருப்பது போல, தேவனோடு வாழ்கிற நித்திய வாழ்வு, அவருடைய குமாரன் மூலமாக அல்லாமல், வேறு வழியில் சாத்தியமில்லை!

## இயேசுவானவர் நமக்காக என்ன செய்திருக்கிறார்?

"இயேசுவானவர் நமக்காகவும் மற்றும் மனுக்குலத்திற்காகவும் என்ன செய்திருக்கிறார்?" என்ற ஒரு இரண்டாவது கேள்வி கேட்கப்படவேண்டும். உண்மையில் நாம், "இயேசு என்ன செய்தார்?" மற்றும் "என்ன செய்து கொண்டிருக்கிறார்?" என்ற இரண்டு கேள்விகளை கேட்க வேண்டும்.

### இயேசு செய்தது என்ன

1 யோவான் புத்தகத்தில் குறைந்தது ஆறு முறை, உலக இரட்சகராக இருக்கும்படி தேவன் தமது குமாரனை அனுப்பினார் அல்லது இயேசு உலகில் வந்தார் என்று நமக்கு சொல்லப்படுகிறது. உதாரணமாக 1 யோவான் 2:2இல், "நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்."[9] என நாம் வாசிக்கிறோம். 1 யோவான் 3:16இல், "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனை கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம்"[10] என்ற ஒரு இணை வசனத்தை வாசிக்கிறோம். பிற வசனப்பகுதியில், "அவர் நம்முடைய பாவங்களை சுமந்து தீர்க்க வெளிப்பட்டார் ..." (1 யோவான் 3:5) என்றும், "பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" (1 யோவான் 3:8ஆ) என்றும், "தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினார் ..." (1 யோவான் 4:9) என்றும், மற்றும் "பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்றும் ..." (1 யோவான் 4:14) நாம் வாசிக்கிறோம்.

### இயேசு செய்து கொண்டிருப்பது என்ன

இயேசுவினால் அருளப்படும் நண்மைகள் - நாம் இரட்சிக்கப்படும்படி-

அவர் இவ்வுலகில் வந்தார் மற்றும் நமக்காக சிலுவையில் மரித்தார் - என்ற கடந்த கால ஆசீர்வாதங்களோடு நின்றுவிடுவதில்லை. அவைகள் நிகழ்காலத்திலும் உள்ளன. இயேசுவானவர் இன்றும் தமது சீஷர்களுக்காக சிலவற்றைச் செய்து கொண்டிருக்கிறார்! அது என்ன?

(1) *அவருடைய இரத்தம் நம்மை சுத்திகரிக்கிறது.* "அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்" (1 யோவான் 1:7)[11] என்ற ஒரு நிச்சயத்தை கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கிறார்கள். கிறிஸ்துவின் மரணம் நமது பாவங்களுக்கான கிருபாதார பலியாக இருக்கிறது. நாம் கிறிஸ்தவர்களாக மாறின போது மட்டுமல்ல, நாம் ஒரு கிறிஸ்தவராக பாவம் செய்தாலும் அது அப்படியே இருக்கிறது. அதன் விளைவாக, நாம் நமது பாவங்கள் கழுவப்பட்டு, மன்னிக்கப்படுகிறோம்.

(2) *அவர் நம்முடைய வழக்குரைஞராக செயல்படுகிறார்,*[12] பிதாவினிடத்தில் அவர் நமது மத்தியஸ்தராக இருக்கிறார். யோவான், "என் பிள்ளைகளே நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1 யோவான் 2:1) என எழுதினார். இது பரலோக நீதிமன்றத்தில் நாம் விசாரிக்கப்படுவது போலவும், இயேசு நம் அருகில் நின்று, நம் சார்பாக பிதாவினிடத்தில் பரிந்து பேசுவது போலவும் இருக்கிறது. ஒரு வேளை அவர் கீழ்வருமாறு சொல்லக்கூடும். "பிதாவே இந்த சகோதரர் (அல்லது சகோதரி) பாவம் செய்திருக்கிறார் என்பதை நான் அறிவேன், மேலும் நானும் ஒரு மனிதராயிருந்ததினால், ஒருவர் பாவம் செய்யாமலிருப்பது கடினமானதென்பதையும் அறிந்திருக்கிறேன். அவர் தன்னுடைய பாவத்திற்காக வருந்துகிறார். தயவு செய்து அவரை மன்னித்தருளும். அவருடைய பாவத்திற்காக தண்டனையை செலுத்த என்னை நான் ஒப்புக்கொடுத்தேன்." இயேசு நம்முடைய வழக்குரைஞராக இருக்கும் போது, அவர் நமது வழக்கில் வெல்வார் என்றும் நிச்சயம் உடையவர்களாக இருக்கலாம்!

(3) *அவர் நமது நித்திய வாழ்வின் உறுதியாக இருக்கிறார்.* யோவான், "தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்" (1 யோவான் 5:11) என எழுதினார், யோவானுடைய சொல் அகராதிபடி, இயேசு நித்திய ஜீவனாக இருக்கிறார். நாம்அவருக்கு சொந்தமாயிருக்கும்போது, அந்த வாழ்வில் நாம் பங்கு பெறுகிறோம். கிறிஸ்துவினுடைய ஜீவனில் நாம் பங்கு பெறுகிறோம் என்ற அர்த்தத்தில் நாம் இப்போது அதை உடையவர்களாக இருக்கிறோம்; நித்திய ஜீவன் என்பது கிறிஸ்தவர்களால் அறியப்பட்டிருக்கிற ஒரு வாழ்க்கை தரமாக இருக்கிறது. இருப்பினும், இப்போது நாம் அனுபவிப்பது, நித்தியகாலமாக நாம் எதை உடையவர்களாயிருப்போமோ, அதன் ஒரு முன் சுவையாக மட்டுமே உள்ளது. ஒரு நாளில் நித்திய வாழ்கையின் *தன்மை* என்பது, நித்திய வாழ்வின் *அளவாக* மாறும், அளவிட முடியாத, நித்தியமான, எல்லையற்ற, நித்திய காலத்திற்கும் நீண்டிருக்கிற ஒரு அளவாக அது மாறும். இப்போது நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருப்பது, நாம் நித்திய காலமாக

அவரோடு இணைக்கப்பட்டிருப்போம் என்ற உறுதியை தருகிறது.

இரட்சிப்பை நாம் இந்த விதத்தில் குறிப்பிடலாம், நாம் கிறிஸ்தவர்களாக மாறின போது இரட்சிக்கப்*பட்டோம்*; நாம் கிறிஸ்தவராக பாவம் செய்யும் போது மன்னிக்கப்படுவதால் இரட்சிக்கப்*படுகிறோம்*; மேலும் நாம் நம்முடைய நித்திய பலனில் பிரவேசிக்கும்போது நியாயத்தீர்ப்பு நாளிற்கு பிறகு இரட்சிக்கப்*பட்டிருப்போம்*. துவக்கத்தில் அவர் நம்மை இரட்சிக்கும்படியாக மரித்தார், அவருடைய இரத்தம் நம்மை தொடர்ந்து சுத்திகரிக்கிறது மற்றும் அவர் மூலமாகவே நாம் நித்தியத்திற்கும் வாழ்கிறவர்களாக இருப்போம்.

## இயேசு என்ன எதிர்பார்க்கிறார்?

**"இயேசு நமக்காக அதிகமானதை செய்திருக்கிறார், அவர் நம்மிடத்திலிருந்து என்ன எதிர்பார்க்கிறார்?" என்பதே பதிலளிக்கப்பட வேண்டிய மூன்றாவது கேள்வியாக இருக்கிறது. இரண்டாம் அதிகாரத்தில் பெரும்பகுதி இதற்கு பதிலளிக்கும்படியாக எழுதப்பட்டுள்ளது. நாம் 1 யோவான் 2:3-17 வசனப் பகுதியை கவனமாக பரிசீலிப்போமாக.**

இந்த வசனங்களின் அடிப்படையில், தமது குமாரனுடைய இரத்தத்தால் இரட்சிக்கப்பட்டவர்கள் எவர்களோ, அவர்களிடத்தில் தேவன் என்ன எதிர்பார்க்கிறாரென்பதை பற்றி நாம் என்ன கூறலாம்? நான்கு காரியங்கள் குறிப்பாக கூறப்படுகின்றன அல்லது உணர்த்தப்படுகின்றன.

*(1) நாம் கிறிஸ்தவராக மாறின போது, தழுவிக் கொண்ட சத்தியங்களை தொடர்ந்து பற்றிக் கொள்ள வேண்டும் என்பதை யோவான் உணர்த்துகிறார்* (2:12-14). மூன்று வகையான கிறிஸ்தவர்கள் - "பிள்ளைகள்," "பிதாக்கள்" மற்றும் "வாலிபர்" ஆகியோர் 2:12-14 வசனப் பகுதிகளில் குறிப்பிடப்படுகின்றனர். இந்த வசனப்பகுதிகளில் அநேகமாக, முன்னும் பின்னும் என்ன வருகிறது என்பதை குறிப்பிடாத தனிநிலைமொழி போல் காணப்படுகிறது. யோவான் தான் முகவரியிடும் எல்லா கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கி குறிப்பிட விரும்புவதாக தெரிகிறது. அவர், அவர்கள் இயேசு யாராக இருந்தார் என்பதையும் மற்றும் தங்களுக்காக என்ன செய்திருந்தார் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினார். அவர் "உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளன"; "ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்"; பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்திருக்கிறீர்கள்; "பிதாவை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்"; "நீங்கள் பலவான்களாயிருக்கிறீர்கள்" மற்றும் "தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறது" என எழுதினார். கள்ளப் போதகர்கள் இரட்சிப்புக்கு அவசியமான ஏதோ ஒரு சிறப்பான சத்தியத்தை தாங்கள் மாத்திரமே அறிந்திருந்ததாக உரிமை கோரினார்கள். மேலும் இந்த விசுவாசிகள் தங்களுடைய கிறிஸ்தவ விசுவாசமானது போதுமானதாக இருக்கவில்லை என அவர்களை நம்பவைக்க முயற்சித்தனர். அவர்கள் விசுவாசம் எந்த விதத்திலும் குறைவானதாக இருக்கிவில்லை என்பதை விசுவாசிகள் அறிந்து கொள்ளும்படி யோவான் விரும்பினார்! அவர்கள் விசுவாசிக்க வேண்டியதும் மற்றும் போதிக்க வேண்டியதுமானது ஏற்கெனவே அவர்கள் அறிந்திருந்ததாகவே இருந்தது.

*(2) யோவான் நாம் கற்பனைகளை கைக்கொள்ள வேண்டுமென கூறினார்* (2:3-6). உண்மையில் அவர், "அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான்,

அவனுக்குள் சத்தியமில்லை" (1 யோவான் 2:4) என சொன்னார். இதற்கு எதிரிடையாக, "அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாய் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிவோம்" (1 யோவான் 2:5; காண்க வசனம் 6). நாம் என்ன கற்பனைகளை கைக்கொள்ளவேண்டும்? நாம் எல்லா கற்பனைகளையும் கைக்கொள்ள வேண்டும்! ஒருவர் தாமாகவே சில கற்பனைகளை தெரிந்து கொண்டு, இதற்குத் தான் கீழ்ப்படிவேன் என வாதிட்டால் அவர் எப்படி இயேசுவை உண்மையாக பின்பற்றுகிறவராக இருக்க முடியும்? உதாரணமாக, ஒரு கிறிஸ்தவர், "என் அயலானுக்கு நான் நன்மை செய்வேன், ஏனெனில் கிறிஸ்துவானவர் நான் இதை செய்யும்படி விரும்புகிறார், ஆனால் சகல ஆராதனைகளில் கலந்து கொள்ளும்படியும், அல்லது சபைக்கு கொடுக்கும்படி கர்த்தர் கட்டளையிட்டிருந்தாலும் நான் அவைகளை செய்யமாட்டேன் என சொல்வது சரியாக இருக்குமா"? நிச்சயமாக சரியாக இருக்காது!

*(3) நாம் சகோதரர்களை நேசிக்க வேண்டுமென யோவான் சொன்னார்* (1 யோவான் 2:7-11). தேவன் கொடுத்துள்ள எல்லா கட்டளைகளிலும், சந்தேகத்துக்கிடமின்றி ''ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்'' என்ற கட்டளையை அதிகம் வலியுறுத்தினார். இது ஒரு புதிய கட்டளையல்ல என்பதை சுட்டிக்காட்டினார். அன்புகூருங்கள் என்ற கட்டளை எல்லாக் கட்டளைகளையும் உள்ளடக்குகிறது, இந்த கிறிஸ்தவர்கள் அன்புகூரவேண்டுமென்று ஆதி முதல் போதிக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்துவானவர் இந்த கட்டளையை தமது சீஷர்களுக்கு கொடுத்த போது, அதை அவர், "புதிய கட்டளை" என அழைத்தார் (யோவான் 13:34, 35).[13] மேலும், நாம் சகோதரனை பகைத்துக் கொண்டு ஒளியில் நடப்பதாக கூறினால் நாம் பாவம் செய்கிறவர்களாயிருக்கிறோம் அல்லது இருளிலே நடக்கிறவர்களாயிருக்கிறோம் என உரைத்தார். கிறிஸ்துவானவர் நமக்கு செய்துள்ளவைகளுக்கு, நாம் பதில் செய்வதற்கான ஒரு வழி, நம்முடைய சகோதர சகோதரிகளை நேசிப்பதாகவிருக்கிறது.

*(4) நாம் உலகத்தை அன்புகூரக்கூடாது என யோவான் போதித்தார்* (1 யோவான் 2:15-17). நாம் நேசிக்கக் கூடாத "உலகம்" நாம் வாழும் இந்த சரீர உலகமோ அல்லது அதில் வாழும் மக்களோ அல்ல, மாறாக, "மாம்சத்தின் இச்சை," "கண்களின் இச்சை," மற்றும் "ஜீவனத்தின் பெருமை" ஆகிய உலகத்திலுள்ள பாவ எண்ணங்கள் மற்றும் செய்கைகளையே நாம் வெறுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய வாழ்க்கை இச்சை மற்றும் பெருமை ஆகியவற்றால் ஆதிக்கம் செலுத்தப்படுமானால், நாம் பிதாவை நேசிக்க முடியாது.

மேலும் யோவான் நாம் உலகத்தை நேசிக்காமல், தேவனை நேசிக்க வேண்டுமென்பதற்கு யோவான் ஒரு ஊக்குவிப்பை கொடுக்கிறார்: "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம் ..." (1 யோவான் 2:17). நம்முடைய இச்சைகள் யாவும் முழுமையாக நிறைவேற்றப்படக்கூடுமானாலும் நாம் விரும்பின யாவையும் இவ்வுலகில் பெறக் கூடுமானாலும், இந்த உலகம் அழிந்து போகும் போது நமக்கு என்ன மிஞ்சியிருக்கும்? நாம் மரிக்கும் போது, இவ்வுலகத்தை விட்டு கடந்து போகும்போது நம்முடைய சாதனைகளால் நமக்கு பயன் என்ன? இருப்பினும், ... "தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்." நாம் உலகத்தை நேசிக்கக் கூடாது,

*ஆனால் தேவனை நேசித்து, அவருடைய சித்தத்தை செய்ய வேண்டும். அதன் பின்னர், நாம் என்றென்றும் அவருடன் வாழுவோம்.*

## முடிவுரை

*இயேசு, மாம்சத்தில் வந்த தேவனுடைய தெய்வீகமான குமாரனாக இருக்கிறார். இவரைத்தான் தேவன் உலக இரட்சகராக இருக்கும்படி அனுப்பினார். நாம் கிறிஸ்தவராக மாறும் போது, அவர் நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கிறார்; நாம் கிறிஸ்தவராக பாவம் செய்தால், அவர் தொடர்ந்து தமது இரத்தத்தினால் நம்முடைய பாவங்களை கழுவுகிறார்; மேலும் அவருக்குள் "நித்திய வாழ்வு" இருக்கிற படியால், நம்மை நித்தியமாக இரட்சிப்பார். அவரால் இரட்சிக்கப்பட்ட நம்மிடத்திலிருந்து அவர் சில காரியங்களை எதிர்பார்க்கிறார். (1) நாம் ஏற்றுக்கொண்ட சத்தியங்களை உறுதியாக பற்றிக்கொள்ள வேண்டும். (2) நாம் அவருடைய கட்டளைகளை கைக் கொள்ள வேண்டும். (3) நாம் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும். (4) நாம் உலகத்தை நேசிக்க மறுக்க வேண்டும்.*

*ஒரு வேளை நீங்கள் தாமதமாக சென்றதால் ஒரு பேருந்துவையோ அல்லது ஒரு தொடர் வண்டியையோ தவற விட்டுவிட்டீர்கள். அந்த நேரத்தில், அந்த அனுபவம் உங்களுக்கு பெரும் துன்பமாக தோன்றியிருக்கலாம் - ஆனால் சில நிமிடங்களில் நீங்கள் செல்ல விரும்பிய இடத்திற்கு உங்களை அழைத்து செல்லும் ஒரு தொடர்வண்டியே, அங்கு வரக்கூடும். ஆனால், பரலோகம் செல்வதற்காக, நீங்கள் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிற சந்தர்ப்பத்தை இழந்து விடக்கூடாது. நீங்கள், "பரலோகம் செல்வதற்கு வேறொரு வழி இருக்கும்" என சொல்ல முடியாது. கிறிஸ்து ஒருவரே இரட்சகராக இருக்கிறார் (நடபடிகள் 4:12). அவர், இது தொடர்பாக, "நானே (ஒரே) வழியும், (ஒரே)சத்தியமும், (ஒரே) ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவான் 14:6). நீங்கள் கிறிஸ்துவை தவிற விட்டுவிட்டால் பரேலாகத்தை இழந்து விடுவீர்கள்!*

*இரட்சிப்பு குமாரன் மூலமாக கிடைக்கிறது! நீங்கள் குமாரனிடத்தில் வந்து இரட்சிக்கப்படுங்கள்! அவரை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புங்கள் (லூக்கா 13:3), அவரை தேவகுமாரனென்று விசுவாசிக்கிற உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள் (ரோமர் 10:9, 10), மற்றும் பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். இதை செய்யுங்கள், நீங்கள் தேவ குமாரனால் இரட்சிக்கப்படுவீர்கள் (நடபடிகள் 2:38).*

---

குறிப்புகள்

*[1]விளக்கவுரையாளர்கள் பொதுவாக இந்த வாக்கியத்தை கிறிஸ்துவின் நபர் தன்மைக்கு சமமாக்குவதில்லை, ஆனால் கிறிஸ்துவை பற்றியப் செய்திக்கு ஒப்பிடுகிறார்கள். [2]"கிருபாதார பலி" (hilasmos) என்ற வார்த்தை பாவங்கள் மூடப்பட்டு மற்றும் மன்னிக்கப்படுகிற "பாவ நிவர்த்தியை" குறிக்கிறது* (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 494). *[3]யோவானுடைய நிருபத்தின் வேறு ஒரு*

இடத்தில் இயேசு "நாமம்" என்ற வார்த்தையால் குறிப்பிடப்படுகிறார் (3 யோவான் 7). [4]கள்ளப்போதகர்கள் "நம்மிடத்திலிருந்து பிரிந்து போனவர்கள்" என்று சொல்லப்படுவதிலிருந்து, சிலர், யோவான் எந்த சபைக்கு அல்லது சபைகளுக்கு எழுதினாரே அவைகள் பிரிவினைகளை சந்தித்துக் கொண்டிருந்தன என்ற முடிவுக்கு வருகிறார்கள்; "அவர்களுக்கு யோவானுடைய நிருபங்களில் வரலாற்று சூழ்நிலையை புரிந்து கொள்வதற்கு 1 யோவான் 2:19 மிக முக்கியமான வசனமாக இருந்தது" (Thomas F. Johnson, *1, 2, and 3 John,* New International Biblical Commentary [Peabody, Mass.: Hendrickson Publishers, 1993], 56). விசுவாசத்திலிருந்து விழுந்து போவது சாத்தியமில்லை என்று நம்புகிற கால்வினிஸ்டுகள், இந்த வசனப்பகுதியை எடுத்துக் கொண்டு, அவ்வாறு விழுந்து போகிறவர் கிறிஸ்தவராகவே இருந்ததில்லை என வாதிடுகின்றனர். யோவான் குறிப்பிடுகிறவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கவில்லை என்பதை வாதத்திற்காக ஒருவர் எடுத்துக் கொண்டாலும், அது விழுந்து போன எல்லாருமே கிறிஸ்தவர்களாக இருந்ததில்லை என்பதை நிரூபிப்பதில்லை. புதிய ஏற்பாட்டின் பல வசனப்பகுதிகளில் ஒருவர் விழுந்து போவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி போதிக்கப்பட்டுள்ளன. கீழ்வரும் விளக்கவுரை நூலில் கால்வினிஸ்டுகளின் இந்த நிலைப்பாடு மறுத்துரைக்கப்பட்டுள்ளது. (Guy N. Woods, *A Commentary on the New Testament Epistles of Peter, John, and Jude* [Nashville: Gospel Advocate Co., 1983], 244-45, and Curtis A. Cates, "There Have Arisen Many Anti-Christs," *Denton Lectures* [1987], 137-38.) [5]வேற்றுக் கொள்கைக்காரன் செரிந்தஸ் என்பவன் இரண்டாம் நூற்றாண்டில் இந்த கொள்கையை போதித்தான். (J. W. Roberts, *The Letters of John,* The Living Word Commentary [Austin, Tex.: R. B. Sweet Co., 1968], 5, 6, 131.) [6]யோவான் சுவிசேஷமும் இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மைக்கான சாட்சிகளை வலியுறுத்துகிறது (யோவான் 5:33-47). [7]KJV மொழிபெயர்ப்பு வசனம் 7 மற்றும் 8 உடன் பிற்காலத்தில் மொழிபெயர்ப்புகளிலும் மற்றும் அநேகமாக யோவானால் எழுதப்பட்ட மூல கையெழுத்து பிரதியிலும் சேர்க்கப்படாததை சேர்த்துள்ளது. 1 யோவானுக்கான அறிமுகத்தை காணவும். [8]சமீபகால விளக்கவுரையாளர்கள் பொதுவாக "ஜலம்" என்பது இயேசுவின் ஞானஸ்நானத்தையும் மற்றும் "இரத்தம்" என்பது அவருடைய மரணத்தையும் குறிக்கிறது என்பதை ஏற்றுக் கொள்கின்றார்கள். வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் இதை ஏற்றுக் கொள்கின்றனர். (Edwin A. Blum and Glenn W. Barker, "1, 2 Peter; 1, 2, 3 John: Jude," *The Expositor's Bible Commentary with the New International Version* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1996], 144; Roberts, 130-31.) இயேசுவின் மரணத்தைப்பற்றிய குறிப்பின் முக்கியமானது, தேவனுடைய தெய்வீக குமாரனாகிய இயேசு கிறிஸ்து உண்மையிலேயே மரித்தார் என்பது உறுதிப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது. இந்த சத்தியமானது சில மறுப்புரையாளர்களால் மறுக்கப்பட்டது. [9]1 யோவான் 4:10ம், "இயேசு நமது பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாக" இருக்கும்படி அனுப்பப்பட்டார் என்று கூறுகிறது. [10]இணை நிகழ்வாக, 1 யோவான் 3:16ம் யோவான் 3:16ம் ஒத்த கருத்துடைய, வேதாகமத்தின் மிக அதிகமாக நேசிக்கப்படக் கூடிய வசனங்களாகவுள்ளன. மேலும் 1 யோவான் 3:16 அநேகமாக புத்தகத்தின் மையத்தில் அமைய, அதன் செய்தியானது யோவான் நிருபத்தின் இதய பகுதியாக வழங்குகிறது.

[11]இந்த வசனத்திலுள்ள வினை சொற்கள் நிகழ்காலத்தில் உள்ளன மற்றும் தொடர் நிகழ்ச்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. [12]"வழக்குரைஞர்" என்பது *parakletos* என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும், இது "ஒருவர் சார்பாக நிற்கும்படி அழைக்கப்பட்டவர்" என்ற பொருள் தரும் "இரண்டு கிரேக்க வார்த்தைகளிலிருந்து

*தரவழைக்கப்பட்டுள்ளது"* (Vine, Unger, and White, 111). *பரிசுத்த ஆவியானவர்* "Paraclete" *- "தேற்றரவாளன்"* (KJV) *"உதவுபவர்"* (NASB) *- என யோவான் சுவிசேஷத்தில் பேசப்பட்டுள்ளார் (உதாரணமாக, யோவான் 15:26). இயேசு தமது சீஷர்களிடம் தேவன் "வேறொரு தேற்றரவாளனை* [*Parakletos*]*" அனுப்புவார் என சொன்னார் (யோவான் 14:16), அது அவர்தான் உண்மையான தேற்றரவாளனாயிருந்தார்* (*Parakletos*) *என்பதை உணர்த்துகிறது. Paraclete என்ற வார்த்தைக்கு பல அர்த்தங்கள் உள்ளன. ஆனால் இங்கு இது "ஒரு வழக்குரைஞர், ஒருவர் சார்பாக நீதி மன்றத்தில் வழக்காடுபவர்" என்ற கருத்தை கொடுக்கிறது* (Woods, 222). [13]F. F. Bruce, *The Epistles of John: Introduction, Exposition and Notes* (N.p.: Pickering & Inglis, 1970; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 53-54.